உ

சிவமயம்.

# அகத்தியமுநிவர்

அருளிச்செய்த

# ஜாலநிகண்டு—உ௱.

இஃது,

தஞ்சைமாநகரம்.

**அப்புக்குட்டிசெட்டியாரவர்கள்**

ஜேஷ்டகுமாரரும்

சென்னை ஹிந்து வித்தியாநிலய அச்சுக்கூடத்

தலைவருமாகிய

**கன்னையசெட்டியார் கேட்டுக்கொண்டபடி**

ம-௱-௱-ஸ்ரீ,

திருவனந்தபுரம்,

**பாலசுப்பிரமணியபண்டிதர்**

அவர்களால்

பிழையறப்பரிசோதித்து

மேற்படி

த. அ. கன்னையசெட்டியாரால்

கல்விவிளக்க அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

முதற்பதிப்பு - காப்பி - ௫00.

1870.

# அறிவிப்பு.

இதனால்சகலருக்குந் தெரிவிப்பதியாதெனில், ௧௮௬௯௵ ௨௫ - வது. ஆக்ட்டின் - ௨௦ - வது. பிரிவினில் - ௬ - வது. விதியின் பிரகாரம் இதை ஒருவரும் அச்சிடவுங்கூடாது, மற்றொரு பாஷையிலு மொழி பெயர்க்கவுங்கூடாது, அப்படிக்குப் போடுவாராகில் மேற்கண்ட ஆக்ட்டில் செப்பியிருக்கிறபடி கோர்ட்டின் மூலமாய்த் தண்டனைவிதிக்கப்படும்.

௧௮௭௦௵ ஜூன்மீ ௧௨ } இப்படிக்கு
த. அ. கன்னையசெட்டியார்.

உ

கடவுள் துணை.

பதினெண் சித்தர்களில்

மகாமகத்துவம்பொருந்திய

# அகத்தியமுநிவர்

திருவாய்மலர்ந்தருளிய

# ஜால்நிகண்டு-உ௱.

## காப்பு.

உன்னியபொதிகைவாழுங் குருமுனியருளையோதி
இன்னியநிகண்டுபாடி யிந்திரஜாலநூலைப்
பன்னியபாஷைதோன்றப் பண்டிதவேதநாவுக்
கன்னியுமுமையுமீசன் கந்தனுங்காப்புத்தானே. (௧)

தானெனும்வழலையாதி சற்குருவடிவுமீசன்
வானமும்புவியுமாதி மதிரவிவெளியில்நின்ற
ஞானமுமாகியம்மை நாதமும்விந்துமாகி
மோனமாய்நின்றபிண்ட முடிவுதன்காப்புத்தானே. (௨)

## நூல்.— வேறு.

காப்புக்குவிந்து விட்டக்கருவொளி
மூப்புவுக்குத்திவை முன்னைவணாந்திடு
கோப்புக்குவொண்ணலர் கூடவளிப்பது
ஆப்பதுபோய்விடி லாடாதுதேரோ. (௩)

தேரனுமானால் சிகாரத்தில்வாலையை
ஆரனுமானால் அப்புவைமேவிடு
மாரணமானால் (மசி) (நசி) யென்றிடு
பேரினில்முன்னும் பின்னுமெழுதிடே. (௪)

(பிடிகருத்தொழில் - நெய்.)

எழுதியபிண்ட மிறக்கியநெய்தனைப்
பழுதறவெந்தத் தொழிலுக்குஞ்செய்திடு
வழுவறவித்தை மாறுமலாடிடுந்
தொழுவறக்கல்லாத் துடியதுள்தானே. (௫)

(சல்லியகரு - பிடிகருமாவுக் கொடிமூலம்.)

துடிபெருஞ்சல்லிய நாலுக்கொருதொழில்
அடியடிவாழை யம்மயன்படைப்பதால்
பிடிகருமாவைப் பிலக்கப்பிடித்திடு
வடிவுள்ளசக்கர தேவிவலுக்குமே. (௬)

(மஞ்சட்பாவை.)

வலுக்கிரமஞ்சட் கிழங்கினிற்பாவைக்
குலுக்குறச்செய்து கொடிமூலஞ்சுத்து
வலுக்குறையாமல் வலுவாயடக்கி
நிலப்பிலுக்குநிற மெடுத்துப்பிலுக்கிடே. (

எடுத்திடச்சொன்ன யெழுதியிருமலங்
கழுத்திடுசுத்தி கழுவுமுன்வாங்கி
அழுத்திடுபிண்டத்தை ஐங்காயஞ்சேர்த்துக்
கொழுத்திடுபாவைக்குக் குறையறப்பூசையே. (

(மயானபூசை.)

பூசைதணியிற் பூட்டுமயானத்தில்
ஆசைதீரவே ஆடுடன்கோழியும்
மூசையிலன்னியம் முட்டையுந்தாக்கிடப்
பேசையிலந்தப் பிணமும்வருமங்கே. (

அங்கேயிராதே அப்புறம்போய்விடு
எங்கேயென்னாலும் பதிக்கில்லையென்பதாய்
துங்கேகனவிலுஞ் சொல்லாதருகூடிமே
பங்கேருகப்பெனப் படுக்கையைக்கேளே. (க

(மாதர்வசியம்.)

கேளேநினைத்தகிளிமொழிமாதர்கள்
தாளேயிட்டது தடித்தடிமண்ணையும்
சூளேவொருபிடி (தும்) மெனவெடுத்திடு
நாளேதுவெள்ளி நடுமத்தியானமே. (க

(மந்திரம் - தும - சுக்கிரவாரம்.)

தியானம்வசியென்று செப்புறநாறு
மயானத்திற்சொன்ன மஞ்சளின்பாவை
தியானத்தைக்கொண்டு சேபிநிசியிலே
மயானத்திற்பேயும் பெண்கொண்டுவருகுமே. (கஉ)

(மோகனம்.)

வருமேயுடன்கட்டை மானூர்கருவுந்
தருமேசெயமோ கனஞ்சவுந்தோத்திரம்
மருமேவுசக்கரம் மாதரடியிடு
குருமேவுவந்துமே கூறுவாள்பாரே. (௧௩)

பாரினில்வட்டம் பதிப்பாயொருமுறை
சீருறுமவ்வையுஞ் சேகரமாக்கிவை
பேருடபேனாயும் பிறகேவனாத்துவை
ஊனைவிட்டோடி யுலாவுருவாளே. (௧௪)

வைப்பதுமஞ்சட் வருக்குஞ்சிலைபூசை
அப்பவல்லோதொழில் ஆடும்வழலையாம்
முப்பதுநாழிகை மூத்தவள்மந்திரம்
தப்பிவிடாதே சாரு (தூ) மென்றே. (௧௫)

(நயனங்கெடுக்க.)

தூமென்றஅக்ஷரஞ் சொல்லிமுகிந்தால்
நாமொன்றுசொல்வோம் நயனங்கெடுக்க
போமென்றுசத்துரு பொசிப்புப்பலவுடன்
மீமென்றமின்புழுமின்னியெடுத்திடே. (௧௬)

உன்னியமின்புழு வொக்கவனாத்ததில்
கன்னிவழலைக் கடுகளவேற்றியே
அன்னியரன்னம் பொசிப்புறவானால்
மின்னியநோக்க மொழிந்திடுந்தானே. (௧௭)

தானேவணங்கச் சத்துருவுன்னை
நானேதோவேனெனவும் வந்துகண்ணில்
தேனேபுளியந் தேனிட்டுமிளகுடன்
மானேவிழியிருள் வாங்கும்வெளியே. (௧௮)

(வெளிக்கருத்தம்பலம்.)

வெளிக்கருத்தம்பலம் வேணதெடுத்து
பளிவல்லூருநஞ்சு பாச்சியனாத்து
மெழுகதுவனல் வேதிச்சுவொன்றாய்
தொழில்செய்துபாரு சொன்னவிதமாமே. (௧௯)

{பாவைவுரு - விரோதியைப்போற்செய்து முள்ளுகுத்துதல்.}

விதமென்னபாவை விரோதியுருப்போல்
சுதமுடன்செய்து தாளகமுச்சி
பதமுறமுந்தி மார்பினில்முள்ளால்
குதவளைமிதுங்கக் குறிப்புடன்குத்தே. (௨௦)

{முள்விபரம் - இலாடயிரும்பு கிராணத்தில் பண்ணின ஆணி.}

குத்தியகாரா குளியெட்டிநாலும்
முத்தியகெந்த முள்ளெயித்தாலே
வத்தியவட்டத் திருக்கைவால்முள்ளால்
நத்தியநட்டுவக் காலிமுள்த்தேளே. (௨௧)

முள்ளென்பார்கள்ளியெழு முள்ளென்பார்சிலர்
விள்ளுரோணி லாடத்திரும்பை
வொள்ளியகிராணம் பிடிக்குமளவில்
வள்ளிசாயாணி பிடித்துவைமாட்டிடே. (௨௨)

(மாடனுக்குப்பெலிசாவல்.)

மாடனையேவு பிடிப்பான்மடங்கச்
சோடனையாக வுபசாரஞ்சொல்லி
சாடனமந்திரம் சாவல்பெலிவெள்ளை
வோடென்னவோட்டத்தி லுயிர்கொள்ளுவானே. (௨௩)

(பாவை - எரிப்பு - புகை.)

கொள்ளுஞ்சுடலையிற் குறிப்புள்ளபாவையை
கிள்ளிமணலிட்டுக் கிண்டதின்மீதில்
கள்ளிவிற்கிடகன விடுவேப்பெண்ணெய்
யள்ளிய மசி நசி யாயிரத்தெட்டே. (௨௪)

(ஸ்திரீகளுக்கு - மீடு.)

ஆயிரத்தெட்டுரு வாகுமுன்மூத்தவள்
வாயுனாச்சீலை வடிதூளிப்புகையை
நீயுறக்காட்டு நிலைகெடும்பேய்கள்
சீவுறமந்திரஞ் செப்பியதாமே. (௨௫)

செப்பியவிஞ்சை செகசாலமாடும்
ஒப்பியபிண்ட முரைக்கவொண்ணுதே
இப்புவிமீதி லீடொன்றுகேளு
அப்பிலெழுப்பை யுரவத்தைப்பாரே. (௨௬)

(புருஷர்களுக்கு - மீடு - அப்பும் - உப்பும்.)

பார்ப்பதுகோசலம் பதக்குநீராகும்
வார்ப்பதுபாண்டம் வாய்மூடிசெய்து
ஏர்ப்பதுசுள்ளியோட் டெரியிட்டுக்கொண்டு
கார்ப்பதுவுப்பைக் கருவிட்டுத்தாக்கே. (௨௭)

தாக்கியபோது தையலரெல்லாம்
நோக்குவருன்னை நொடிக்கருவாலே
ஆக்கியமன்ன ரன்புறக்கேளு
பாக்கிலேநாதம் பகர்ந்திடச்சொல்லே. (௨௮)

(தண்டு - சுருங்க.)

சொல்லியதண்டு சுருங்கவகைகேளு
சொல்லியமாட்டுணி குடிக்கிறரத்தம்
சல்லிய அட்டை ரத்தமுஞ்சாரித்து
வொல்லியபேர்க்கு வுணர்வுடன்தாக்கே. (௨௯)

உணர்வுடன்சென்று லுதிரமுருது
மணமுறப்போக போக்கியமாறுங்
கணவனைகைவிட்டு கடக்கநிற்பாளே
பிணமெனத்தண்டு பெருத்திடக்கேளே. (௩௰)

(தண்டுபெருக்க.)

பெருத்திடப்பாலும் பெரியமுருங்கை
பொருந்திடப்பூவை அவித்துப்பிழிந்து
குழித்திட்டுக்கொண்டா லெடுக்கும்பிலமே
கொருத்திட்டுநீதாங் குடித்திடுவீரோ. (௩௧)

(பாவைக்குப்-பூசு-ஐங்காயம்-பிணக்கொள்ளி-ஆப்புகிடாவும்.)

வீரத்தைவாங்கி வெள்ளையுங்கூட்டிப்
பூரத்தைச்சேர்த்துப் புழுகுங்கலந்திடு
காரத்தைவைத்த கருவுக்கிதுசரி
சாரத்தைபண்ணுந் தனிப்பாவைபூசே. (௩௨)

பூசியமுசுக்கிது பூச்சுமேஆடிடும்
பேசியபேச்சுக் கெதிராளிபேணா
ஆசுவாய்க்கிறி யடக்கிவைக்கும்மாய்
தாசுவன்கொள்ளு பிணஞ்சுடுகோலே. (௫௩)

(மலத்தல்.)

கோலதுகிட்டில் முளைபோல்செறுக்கி
மேலுறஆப்புக் கிட்டிஅம்மலத்தில்
மூலமடைக்கு முன்னொடுபின்னுங்
காலனும்வந்து கைபிடிப்பானே. (௫௪)

(சாதம்வேகாதிருக்க - நத்தைச்சூரிவேர்.)

பானையில்சேர்த்து பருக்கைவேகாமல்
சூரியநத்தை சூரியன்வேனா
மீனத்தில்காப்பு விரும்பியிசைத்திடு
கூனையிலெதுவுங் கொதியாதுபாரே. (௫௫)

{ எட்டிமுளை - வழலைகூட்டி - நத்தைச்சூரி-
வசம்புகூட்டி - மரணத்துக்கு. }

கொதியாதுமாதர் கும்பியில்மூலஞ்
சதியாதுமுந்தி வழலையைத்தாக்க
விதிமுகிபுமன்னுள் விளம்பினேமெட்டி
விதியாளியானல் மேவுவான்பாரே. (௫௬)

வானவருங்காயம் வளருள்ளிவெந்தய
மூனம்பெருவோம் மூள்ளகடுகுவ
மேன்பாடதாக விரும்பியஆக்கை
கான்படவந்து கருதித்துடருமே. (௫௭)

துடருமேஆக்கை துடக்கையருகக்
கடருமேயிப்பால் கைகண்டவித்தை
படருமேயப்பால் பத்திப்பிடித்து
யிடருமேசூழ நவிலவசம்பே. (௫௮)

வசம்பையுங்கூட்டு மரணமுனாக்கும்
நிசம்பெறப்பாண்டத்தின் வட்டமுந்தள்ளி
கசங்கெடக்கின்ற கடாரமின்தப்பாது
துசங்கண்டவித்தை சொந்தமிதாமே. (௫௯)

{ வெட்டுப்பட்டவன் - சிரசொடுசுணங்கு
ஐயங்காயம் - வேப்பெண்ணெய் - முள்ளு
எழுதயிடுகொட்டில் கரவிக்கவும். }

ஆமேயிதுகருப் புண்டென்பதில்லை
நாமேயறிந்து நாட்டுவோங்கேளாய்
தாமேதுணிந்துயிர் தாக்கியவெண்டலை
யாமேசுணங்கு தொடர்மலேயாடிடே. (சo)

ஆடியவெண்டலை யோட்டியுமங்காயம்
சூடியபோதுதுணிந்தமை வேப்பெண்ணெய்
கூடியமுள்ளாற் குதித்தவன்பேரை
பாடியபேலைப் படித்தெழுதீரே. (சக)

எழுதிமுகிந்தா லினிகருவென்ன
புழுதியைத்தெள்ளி போட்டிடுவாயில்
எழுதியவொட்டிடை யிடுகொட்டில்தூவி
முழுகிடுமுன்னே மூர்த்தியைமூட்டே. (சஉ)

மூட்டியஆணி யெழுத்தின்மேற்குத்தி
வாட்டியெடுத்திடு மரணமடைவான்
மீட்டிடஅந்த யெழுத்தையளித்துக்
காட்டியநீரிற் கழுகவிடுமே. (சஙு)

{ கத்திரிக்காய் - மலசலங்கம் - ஐங்காயம்
குற்றிபிளவை. }

விடுமேகத்திரிக் காயின்மேல்மலம்
படுமேல்சலமும் பாடிஐங்காயம்
தொடுமேகருவுந் திவட்டித்தடவ
விடுமேகுற்றி விடுபில்லியாகுமே. (சச)

{ சல்லியதேவி திருப்பவும்
மத்தங்காய் - பயித்தியங்காண. }

பில்லியாய்ச்சென்று பிளவைமுதுகில்
சல்லியதேவி தாக்கிப்பிடிப்பள்
சொல்லிமுடியுமோ துளாயிரம்பொற்தாம்
துல்லியகாயின் சூக்ஷந்துடையே. (சரு)

நடைத்துநீர்விட்டால் துளைபோந்தடைபடும்
படைத்தவிதிவந்து பாரிற்பிழைப்பான்
உடைத்தவனுட்டை திறந்ததுபோலே
எடைத்தலையீசன் முன்படைப்பானே. (௪௬)

படைப்பான்பிரமன் பரமசிவனுந்
துடைப்பான்சுருக்கில் சூக்ஷத்தில்ரட்சிப்பான்
அடைப்பான்திறப்பா னவ்வித்தைக்கெல்லாம்
விடைப்பானிவனென்று விளம்புவார்பாரே. (௪௭)

பாரோயிதுசாலம் பகருமிருநூறு
தோரானவட்சரம் தோன்றுங்கருக்களும்
நேரானமந்திரம் நெருங்குமுருக்களும்
கூரானசக்கரம் குறிக்கும்வேதமிதே. (௪௮)

(பேதனமோதல்.)

வேதமாமட்சரம் விரும்பும்பரிச்செம்பு
போதமாம் (சி) காரம் போற்று (நசி) (மசி)
நாதமாமுப்பூவும் நவின்றிடுமைங்கோலம்
நீதமாம்பெலியுடன் தெளிவுறவோதிடே. (௪௯)

ஓதியபோது வூனைவிட்டோடி
பாதையும்வீடும் பதியுமிழந்து
காதலிபெண்ணைக் கரசினிதோர்த்து
வீதியில்வந்து வெறிமீறுவானே. (௫௦)

மீறியகொட்டி விடவேவிடமானால்
சீறியகாயைச் சீக்கிரம்பெற்று
கோறியேயதனைக் குணமெனக்குறித்து
நீரிலேபோட்டு நிமிஷம்விடுமே. (௫௧)

{ மை - காரொள்ளுதயிலம் - தூக்கணங்குருவிமுட்டை
கழுதைதண்டு - வெட்டுண்ட மண்டைவோடு
முட்டை - அழிஞ்சித்தயிலம். }

விடுமேமையொன்று விளம்பிடக்கேளு
சுடுமேகாரொள்ளி னருவளிதயிலத்தில்
படுமோ தூக்கணங் குருவிபார்முட்டை
எடுமேகருக்கி யின்வகைதானே. (௫௨)

தானேகறுத்த கழுதையின்றண்டு
மானேவெட்டுண்ட மண்டையிஞேடு
தானேசெருப்படிச் சாறுடன்மேனிச்சாற்
ஆனேக்கண்சட்டி யடுப்பேற்றிவைத்திடே. (ருங)

வைப்பதுவெவ்வேறு வகைப்படிவாங்கி
கைப்பிடிமுட்டை கருக்கியநீரும்
இப்படிவைக்க யிதையெல்லாமொக்க
அப்பனேசொன்னே னளிஞ்சிவித்தையே. (ருச)

விரையத்தயிலத்தை வேதித்துச்சேர்த்து
அரைத்துமைகூட்டி அடைத்துகைகொண்டு
நரைத்தவன்கைதப்பி நாய்கடியாதவன்
துரைக்கருகூட்டிநீ சோதித்துப்பார்த்திடே. (ருரு)

(அஞ்சனதேவிமந்திரம்-ஓத.)

சோதிப்பதஞ்சன தேவியைத்தோத்திரம்
மீதிக்குள்பாதாள கண்டியைவேண்டிடு
ஆதிப்பொருளா மடக்கியதெட்டெல்லாம்
பூதிருங்கைவிட்டுப் பூமியுங்கிருமே. (ருசா)

(பாதாள அஞ்சனம் - அகத்தியர் அஞ்சனம்.)

பூமியின்பின்பு புதைத்தபுதையலும்
நேமிதமான நிதிபொருளானதும்
தாமிதமன்றியே தந்திடுமையிது
நாமிதுகண்டு நடத்துந்துரையிதே. (ருஎ)

(வாடைப்பிண்டமந்திரம்.)

துரைப்படிவாடை சொல்லியபூவி
லுரைக்கிறேன்கேளு முருவமிலாமல்
நிரைக்கிறபிண்ட மதைநீகொண்டுமே
கரைக்கழுவானென கருதுருநூறே. (ருஅ)

(உரமிட்டு - கள்ளு - சூவ - வஸ்து - ஙவ.)

நூறுரு (ம) (ந) (ய) (வ) (சி) யென்றுநோக்கிக்
கூறியபாண்டங் குறித்துள்ளேவைத்து
பூரமுஞ்சற்குற பொடித்துடன்போட்டு
ஆறியகள்ளு அறுநாழிவஸ்த்தே. (ருகூ)

(தேன் - நாவுறி - பசளையமுறி - ௯௨ - கொச்சிமஞ்சள்.)
வஸ்த்துமூன்றுழி மலர்த்தேனுநாவுறி
பத்தரைமூன்றுழி பச்சிலையமுரியாம்
சத்துறவண்டு துகிலாடைமீதினில்
எத்தியகொச்சி மஞ்சளிடித்திடே. (௬0)

(நாட்டுமஞ்சள் - குளவிந்தமஞ்சள் - பலம் - ௬.)
இடிக்கிறமஞ்ச ளிவடத்துமஞ்சளும்
படிக்கிறகுளவிந்த மஞ்சளும்பாச்சிவை
யடிக்கடிவிணே யலட்டாதேகேளுமே
துடிக்கிறஆறு பலமென்றுசொல்லிடே. (௬௧)

சொல்லியிடித்துத் தூளிதமஞ்சள்
வல்லியவண்டின் மேல்வாரிச்சொரிந்திடு
மெல்லியவட்டுபோல் வெந்துமேமண்ணையில்
சல்லியப்பிள்ளையின் தாளிகின்னடிறக்கே. (௬௨)

(சுருள்ளி - வசம்பு - அறுகம்புல்.)
இறக்கையில்சுருள்ளி யிதமாகக்கிள்ளிவை
யுறக்கம்வராம லறுகம்புல்வசம்பிடு
பிறக்கையில்பித்தம் பிறளாமலேயிரு
குறக்கொள்ளிமூத்தவள் கூடவும்நிற்பளே. (௬௩)

(தாணிக்காய் - வெந்நீர் - ௭ - நாள் - குளிக்கவும்.)
பாழானதேவி பக்கத்திற்போக
யேழுடாதாள்தா ணிக்காயையிடித்திடு
கோளானவெந்நீர் கொதிக்கக்குளித்திடு
மூளாதமோடி முகப்பிரிவாளே. (௬௪)

(கருவூரான் - சுந்தரன் - இவர்கள்வாடை பார்த்துச்சேரு.)
பிரியாதவாடை பேசியதெல்லாம்
அறிவாகச்சொன்னே னகஸ்தியர்வாடை
கருவூரான்வாடை கருவானசுந்திரன்
தருவானதெல்லாந் தாணிதிற்சேரே. (௬௫)

சேர்த்தெடுத்தொன்றாய்ச் செப்பிலேயாக்கி
பார்த்தெடுத்தந்தப் படிபூசியேயிருந்
தோத்திரிப்பார்கள் சுருக்காகவந்துமே
ஏத்தியேதொழுவா ரிதுபோலுங்காணேமே. (௬௬)

காணுதநேரங் கனாவாருனேக்காண
பூணாரந்தோர்ப்பார் புலம்புவார்பெண்கள்
வீணாயிராதே விரும்புவார்மாண்பர்
ஆணாகவுன்னை யணைவார்கனவிலே. (௬எ)

(ஸ்ரீகள் - கனவிலும் பிரியார்கள் திலர்தப்பொட்டிடு.)

கனவிலுமுன்னைக் காண்பார்கள்மங்கையர்
நினைவிலுமுன்னை நேசமேவைப்பார்
மனதிலுமுன்னை மறந்திடமாட்டார்
தனதமாய்த்தேடித் தவிப்பர்கள்பாரே. (௬அ)

{ குன்றி - பேய்ப்புடல் - நாய்ப்பாகல் விரை
சாதிக்காய் - கோரோசனை - காந்தம். }

பாரோர்க்குச்சொன்னேன் பாஷைதுலங்க
ஊரோர்க்கும்பொட்டேன் வுரைக்கிறேன்கேளு
நேரானகுன்றி மணிபருப்பொன்று
பேரானபெயப்புடல் விரைபருப்பொன்றே. (௬௯)

மூன்றான நாய்ப்பா கல்வித்துமேயவ்விதம்
குன்றான சாதிக்காய் கோரோசனையுடன்
மன்றானவூசிக் காந்தமுமுமந்திடை
பொன்றுமலாறும் புகட்டுங்களஞ்சியே. (எ0)

(பொன்னுவரைத்தயிலம்.)

களஞ்சியாய்கூட்டிக் கல்வத்திலாட்டி
வளஞ்செய்தபொன்னு வரையின்சமூலம்
உளஞ்செய்தயில முதகமாய்வாங்கி
நளஞ்செய்தபாகம் நாடிவிட்டாட்டே. (எக)

(வெள்ளைக்கருஞ்சாவல்ரத்தம் - மந்திரம் - வசி.)

ஆட்டியவெள்ளை கருஞ்சாவல்ரத்தமும்
மூட்டிவிட்டாட்டி முகத்தினிற்பொட்டிடு
தீட்டியபோது வசியென்றுசெப்பிடு
போட்டிமைமாண்பர் புகலுவார்சரணமே. (எஉ)

(சபாபதிபீஜம் - உடு - அனாச்சக்கரம் - வ - சி - ய - ம - ந.)

சரணமேசக்கரஞ் சபாபதிபீசம்
திரணமாயண்ட பிண்டமுஞ்செய்யும்
காரணமேபொடுங் கைகண்டவித்தை
மரணமும்தோற்றமும் வருவிக்குமூலமே. (எ௩)

மூலமேசக்கர முறைப்படிகீறியே
சாலமேயிருபத் தஞ்சறைக்குள்ளே
கோலமே-வ-சி-ய-ம-ந-வென்றுவசிகரம்
பாலமேபோடு பார்நடுமாறே. (எச)

(நடுமாறு - மோகனம் - ம-ந-ய-வ-சி - இரண்டெழுத்து.)

மாறியமோகனம் - ம - ந - ய (வசி) யென்று
கூறியரெண்டா மெழுத்தைக்கொண்டோது
வீரியம்பேசும் விசர்மமாங்கிரியே
லேரியசித்தர்க ளெனக்குரைத்தாரே. (எரு)

(தம்பனம் - ந - ம் - எழுத்து.)

உரைத்ததுதம்பனம் ஓதும் (ந-ம-சி-வ-ய)
விரைத்ததுலோக மேவுமிதுதான்
பரைக்குறையாணி பகராரிதனை
திரைக்கடல்மூன்று மெழுத்தெடுத்தோதே. (எசு)

{ வித்துவசெனத்துக்கும் - எழுத்து - ய - வ - சி - ம - ந
உச்சாடனம் - சி - வ - ய - ந - ம. }

எடுத்தோதுவித்துவ செனங்களேகேளீர்
படுத்தோது(ய - வ - சி - ம - ந)வென்றுபாரில்
அடுத்தோடுநாலா மெழுத்தையுமுன்னி
தொடுத்தோதுசூட்சஞ் சொல்லார்கள்பாரே. (எஎ)

பாருவுச்சாடனம் பகருவேன்கேளு
சீருறு (சி-வ-ய-ந-ம) வென்றுசேரு
ஓரொருகால்தலை யாகவேவோது
கூறுருவாப்போற் குலாவும்படிக்கே. (எஅ)

(மாரணம் - சி-வ-ய-ந - கடசியெழுத்து.)

படிமீதில்மாரணம் பாரடாஞானி
மடிவாமெனன்சொன்னேன் (ம-சி-வ-ய) நத்தில்
துடியாமலோது சூரையிடாமல்
கடியானபாதக் கடசெழுத்தோதே. (எகூ)

(பேதனம் - நசிவயம.)

தேவையென்பேதனஞ் செப்புவேன்கேளு
வாயென்னவே (நசிவயம) வென்றோது
சீயெனப்பேதிக்குஞ் சிரநடுமாறு
மாயென்னயின்னம் வகையறியாரே. (அ0)

(ஆகிருஷிணம் - ய-ந-ம-வ-சி - இரண்டாமெழுத்து.)
அறியார்கள்கேளும் ஆகிருஷிணவித்தை
விரிவார்கச்சொன்னார் விசனப்படாதே
நெறியாக (ய-ந-ம-வ-சி) யென்றே
குறியாகவிரண்டா மெழுத்தையுங்கூறே. (அக)

(அஷ்டசக்கரம் - மாறுதல்.)
குறிப்படிச்சக்கரம் அன்பத்தொன்றிட்டு
நெறிப்படிபீஜம் திறுத்தும்பரைக்குள்
வெறிப்படிவீணே விதியறியாதே
கருக்குருவாக கண்டிடுவித்தையே. (அஉ)

(இந்திர அக்ஷரம் - நசிமசி - தூஅ.)
வித்தையிலிந்த அக்ஷரமிட்டு
சத்தியாய்நாலு சந்திபகல் (ஹி) யென்று
மத்திசநாமல ரைந்துமுக்கோணிட்டு
முத்தியாயிரத் தெட்டு (மசிநசி.) (அங)

(சமி - நாள் - ஓத.)
(நசி) (மசி) யென்று நாற்பதுநாளும்
நிசியிலக்கானி நீமனைமேலிடு
குசருறுதுன்பங் கொள்கியப்பாலும்
வசையுறமாளுவான் மண்டலந்தானே. (அச)

(பன்னிரண்டுநாள்.)
தானேமுக்கோணந் தன்னிலவ்வாறிட்டு
மானேபரிகலர் வழங்கியநாமந்
தானேயெழுதி சாடென்றுமாறு
யேனெழுவானீ யீராறுநாளே. (அரு)

(பத்துநாள்.)
நாளினில்வட்டம் நடுப்பகல்சாமம்
சூளமுக்கோணஞ் சொல்லியெழுதிடு
கோளுறவேசிவக் கூறு (மயநவசி)
பாளுவநோய்கொள்ளும் பத்துநாட்குள்ளே. (அசு)

(நோய் - வழலைக்கூட்டி - நீர் - ஓதிதூவ.)
உள்ளநிருந்தால் உண்டிலாவாதம்
உள்ளளுமொன்றால் ஓகோவழலைகுரு
உள்ளதுகாணே ணேதியநீரில்
உள்ளனைக்கூட்டி யோதிநீதூவிடே. (அஎ)

(நிசியில் - தூங்காதிருக்க.)

தூவிடநேரஞ் சொன்னேனிசியில்
ஆவிவிடாதே யாருக்குந்தோன்றிடா
தேவிதன்பூஜை செய்யமறந்து
வோவியம்போலே யுறங்காதுபாரே. (அஅ)

(கூரம்பாகும்.)

பாரென்றுசொன்ன பகையையறுத்திடு
தூரமிருந்து தொனியாமற்செய்திடு
பாரம்பிறக்கப் புனாபாதேயார்க்குங்
கூரம்பிதாகுங் குவலயத்தோர்க்கே (அகூ)

(கருதும்பைமூலம் - கன்னிநூல் - செப்புக்குளிசம்.)

தோர்க்கிறவித்தை யெதிரிக்குத்தோன்ற
மூர்க்கமாய்கவுதும்பை மூலத்தைவாங்கி
காக்கணுமென்று கன்னிநூற்சுத்தி
ஏர்க்கனப்பூசை யேத்திப்பிடுங்கே. (கூ0)

(கூஅ - உரு - செபிக்க.)

பிடுங்கியமூலத்தைப் பேசாமற்செம்பில்
ஒடுங்கியபூசையில் சுத்திக்குளிசமாய்
துடங்கியஆயிரத் தெட்டுருநேர்ந்தபின்
துடங்கியசொன்ன துயில்பிசைத்தூக்கே. (கூக)

(சாஸ்ஜோதிவசியம் - வாக்குப்பாட.)

தூக்கியபோது துவண்டான்பகைவன்
வாக்கினிப்பாட வரிசையைக்கேளு
சாக்கரம்யாளுஞ் சரசோதிநிற்பாள்
மூற்கமாமேவ முறையருள்வானே. (கூஉ)

(வெண்தாமரை - தேனில் - வாலையோத ஒருமண்டலம்.)

மூறையென்னவெண்டாமரை நூலைவாங்கு
குறுகநறுக்கிக் குளிரவுலர்த்தி
தறுகபிடித்துத் தான்வடிகொண்டு
மருவியதேனில் மண்டலங்கொண்டே. (கூங)

கொண்டிடுவிஞ்சை குதித்தசங்கென்று
விண்டிடு (ஐயுங்கிலியுஞ்) சவ்வென்று (நூறு)
மண்டலமோத வாக்கினின்செல்வி
அண்டையில்நின்றே யருள்புரிவாளே. (கூச)

புரிவாள்வராகி புகட்டியசுந்தரி
விரிவானபாடல் விடாதேமுறைமுறை
அரிதானயோகம் வசியங்கைகூடும்
பரிமேவுகீதம் பகருமிம்மாதே. (கரு)

இம்மாநிலத்தி லிருக்குமிம்மூலந்
தம்மோடேதொக்கச் சார்ந்துசெங்கோட்டை
அம்மாகௌரி அறவெள்ளைநஞ்சு
சும்மாகொடுக்கச் சுண்ணம்புசேரே (கசு)

{ சுடு - அடக்கமாய்ச்செய்யவும் - கo - நாளில்
சுரல்வற்றும் - இறப்பான். }

சோரமாய்ச்செய்துவா துடராமல்முன்வினை
வாராமலீரல் வளரும்நாள்பத்தில்
சுரமோயில்லை யிழப்பான்சாப்பாட்டை
வீரம்விடாமல் விழுவானிறந்தே. (கஎ)

இறப்பான்துரியம் யாவருங்கூடி
முறைப்பாடுசெய்வார் முட்டுநோயென்று
கறப்பானையுப்புக் கடும்பில்லியென்று
அறக்கேடுவந்து அழியும்புவியே. (கஅ)

புவிக்குளெவர்க்கும் புகலாதேயிக்கரு
தவிசமூச்சலடிப் பார்மிகவுண்டு
குவிக்குங்கரங்கள் கும்பிடுமுன்னே
செவிக்குச்செவிதா னறியாமற்செய்யே. (கக)

(ஸ்திரீகளுக்குயிடு - களிப்பாக்கு - கள்ளிப்பால்பாடுகாணும்.)

செய்யவேயின்னஞ் செகஜாலங்கேளு
மைவிழிமாதர்க்கு வருகவேசெய்திட
கைவசமாகக் களிப்பாக்கைக்கொண்டு
பொய்யல்லகள்ளியைப் பூசித்துணித்திடே. (க00)

துணித்திட்டபாக்கைத் திரும்பயெடுத்து
பணித்திட்டபாக்கொடு பகுந்துகொடுத்திடு
அணித்திட்டகெர்ப்ப மானதுமங்கே
துணித்திட்டசோனா வடியுந்துடுக்கே. (க0க)

{ கர்ப்பமானல் - சோரவடியும் - மாத்து - பாலில்
சீரகமிட்டுக் குடிக்கவும் - கரு - நாள் - வெந்நீர்குளிக்க. }

துடுக்கானசோரவை துலைக்கவகைகேளு
முடுக்கானபாலில்சீ ரகஞ்சேர்த்திட்டு
இடுக்கானநாத மிறங்காதுவென்னீர்
முடுக்கானகொத்தான் முகத்திில்முழுகே. (கoஉ)

முழுகுவதெப்படி மூவைந்துநாளும்
புளகிதமான புளியுப்புதள்ளிடு
மளவில்ரத்தம் மடைபடுமிப்பால்
அழகியமேனி யவளுக்குண்டாமே. (கoரு)

{ சூதகரு - விபரமறிய - சல்லியமுனிசொன்னது
மஞ்சள் - சிலைமாரசம். }

உண்டானசூத முருகுத்தச்சொன்னர்
சண்டாளசல்லிய மாமுனிதானும்
வண்டாடுமஞ்சள் சிலைமார்க்கத்தை
கொண்டாடுமாதொழில் கூறுலகத்தே. (கoச)

(விந்துநாதப்பிண்டம் - மாக்கரு.)

உலகத்திற்சூதமுறை விந்துநாதம்
புலையர்க்குத்தோணுமாம் பொன்னும்வழலை
தலைவைத்தாற்பாவை சத்தியாய்நின்றிடும்
நிலையற்றமான நில்லாதுபாரோ. (கoரு)

(தாமரைச்சற்பமறியவும்.)

பாரினிற்பிண்டம் பகரார்பெரியோர்
ஊரினிற்கிட்டாது உறவானமாக்கரு
வேரினிற்றண்ணீர் விட்டானிலைக்குமோ
நீரினிற்றுமரை நிற்பதுபாரோ. (கoசு)

(சரக்குகள்போடவும்.)

நிற்பதுசற்பம் நினைவாய்ப்பிடித்து
சற்பத்தின்வாயில் தாளகம்வெள்ளை
கற்பூரம்நாபி கழஞ்சிதான்றாக்கி
வுற்பத்தியாக வுள்ளுக்குத்தாக்கே. (கoஎ)

(தாம்புரச்சீலையில் - வேப்பெண்ணெய்.)

தாக்கியவாயைத் தைத்துதலைமேலாய்
தூக்கிமுகட்டில் தாம்பிரச்சீலையில்
காக்கலஞ்சேர்ந்திக் கடுமலைதாங்கியே
மூக்கனாவேரு முடிந்திட்டுச்சட்டியில். (க0அ)

(முக்கோணவட்டமிட்டு - அரவுநெய் வடிக்கவும்.)

சட்டியில்வேப்பெண்ணெய் தயிலம்விட்டேத்திடு
மூட்டியடுப்பில் மூணுமேற்கட்டி
கிட்டியடுக்கிக் கீறிடுமுக்கோணம்
வட்டமுள்ளிட்டு வடிநெய்யரவுநெய். (க0கூ)

(கெந்திகூட்டி - மீடுகொடுக்க.)

அரவுநெய்கந்தக மிதுவழியாக
வரவுமேகண்டுமயங்காதேயப்போ
திரவுகோலான செங்கொட்டைநஞ்சு
முரமுமேபூனீரு முடன்கலந்தாட்டே. (கக0)

ஆட்டுங்குழம்பி லணுவளவீய்ந்தால்
மூட்டுந்தலைமண்டை மூளைவனைக்கும்
வாட்டியெடுக்கும் வருவான்மறலி
கூட்டுங்கருவுங் கலந்ததிற்கூட்டே. (கக்க)

{ சன்னி - குமரகண்டர்க்கு - எந்தகுழம்புக்கும்
இதுகூட்ட குமிலென்றுசாடும். }

கூட்டுவாயீடு கொடுக்கும்வகைகேள்
கூட்டுவாய்சன்னி குமரகண்டர்க்குங்
கூட்டுவாயெந்தக் குழம்பிற்குஞ்சேர்த்துக்
கூட்டுவாய்சாடுங் குமிலென்றுதானே. (ககஉ)

{ அனுபானம் - மத்தஞ்சாரில் - பிரம்மை
மின்பூட்டில் கண்தெரியாது. }

தானேமத்தஞ் சாற்தன்னிற்கொடுத்திடில்
மானேபிரமை பிடித்துமயங்குவான்
கானமின்பூடு கலந்துகொடுக்க
யேனோதெரியா திருகண்ணுந்தானே. (ககங)

(கன்னிச்சாறு-பிளவைகாணும்-எண்ணெயில் பதைபோம்.)

கன்னியின்சாறு கலந்துகொடுத்தால்
புண்ணியதாய்மேனிப் பிளவையுந்தாக்கி
எண்ணெயிற்முக்கி முழுகினற்றானே
பண்ணியபகையும் பதமும்வராதே. (ககச)

(எதிரிபடைபொருத - தயிலப்வடிக்கிறமந்திரம்.)
வராதேபசாசு மயங்கும்வெண்ணீற்றில்
பொராதேயெதிரி படையுமிப்பொட்டிடில்
இராதேக்ஷணத்தி லிடுபொட்டளித்திடு
தராதேபுண்ணுய்விடுந் தண்ணீர்விட்டோதிடே. (௧௧௫)
ஓதியசர்ப்ப பத்தியிற்றுரிமையின்
சேதியையார்க்குந் திறந்துவிள்ளாதே
சோதியேஹரிஹரி யெனச்சொல்லுமந்திரம்
போதிலாயிரம் பூட்டிவடித்திடே. (௧௧௬)
(வடிப்புக்கெல்லாம் - மந்திரம் ஓத.)
வடித்திடசொன்னதற் கெல்லாமிம்மந்திரம்
படித்திடஆயிரம் பாடிணுற்சித்தியாம்
முடித்திடாதி வழலைக்கருமுறை
பிடித்திடத்தானல்லோ பேரும்பெற்றூர்களே. (௧௧௭)
பெற்றவர்மந்திரம் பேர்பெரியோர்கள்தான்
எத்தனைகோடிபேர் லெக்கில்லையாவரும்
பத்திருரல்லது பாவந்துதிப்பார்
இத்தனைபாடியு மின்னமொன்றுண்டுகேள். (௧௧௮)
(அண்டம்புதைக்க.)
உண்டுகேள்முட்டையின் உள்ளெதிராளியின்
பண்டுள்ளநிர்ம்மலம் பாச்சியுருத்துடன்
பிண்டுசெய்காயமும் விடத்தின்றயிலமும்
அண்டவழலையும் அண்டத்திற்சேர்த்திடே. (௧௧௯)
{ எதிரிமலந் - தயிலம் - அண்டக்கருவழலை }
{ கொடிசுற்றவும் - எதிரிபேரெழுதவும். }
இட்டுவாய்மூடி யிளங்கொடிசுத்தியே
வட்டமாய்த்தோண்டி மயானத்திற்ஸ்தாபிக்க
பட்டவன்பேரும் பார்த்தேயெழுதியே
சட்டமாய்ப்போவான் சரக்குமுடிக்குமே (௧௨௦)
(மேருகம்வரும்.)
முடிக்குமுன்மேருக முடிப்பதைவாங்கி
கொடிக்கின்றமுட்டையை நூல்சுத்தவிழ்த்து
முடிக்கின்றவுள்ளர்க்கரு முட்டைவிட்டப்பால்
குடிக்கின்றநீரிலே கொட்டிவிட்டாருமே. (௧௨௧)

(ஆள்சக்கரங்கீறவும்.)

ஆருமேவிடு ஆள்சக்கரத்தையுங்
கீறுமேகால்கை கீறிமுடிந்தபின்
மாறுமேஅஞ்சு வகைவகையாகவே
சீறுமேமூல பிரணவஞ்சேரே. (௧உஉ)

(சாடனம் - மாரணம்.)

சேருநாற்கோணஞ் சிகாரவகாரம்
மேருவகார நகாரமகார
மூருமேசாடனம் பொன்பொலிதாடுந்
பாருமேமகாரம் பதித்தால்மரணமே. (௧உ௩)

(தம்பனம் - மோகனம்.)

மரணமேமண்ணில் (ம - ந - ய - வ - சி) யூறில்
திரணமேமோகனஞ் செப்பவொண்ணாது
கரணமேமண்முதல் கண்டால்நகாரம்
பிரணவங்கூடிப் போதம்பனமாகுமே. (௧உ௪)

தம்பனமானதுஞ் சாற்றுறேன்வேஷணம்
பண்பழியாதே பகர்வாய் (ய-வ-சி-ம-ந)
வென்பதுசிகாரம் வேண்டும்வசியென
உன்பதுருபேதனம் ஓங்காரந்தள்ளிடே. (௧உ௫)

{ அஷ்டாங்கம் - அ - இம் - தகடுவிபரம் }
{ வெள்ளி - வேசனம் - தாம்பரம் - தம்பனம். }

தள்ளிடு (ந - ய - வ - சி - ம) வென்றுசாதியே
உள்ளிடுமந்திரம் (ஓங்காரங்) கூறுவாய்
வெள்ளியிற்சக்கரம் வேஷணமாடுமே
தள்ளிடுதாம்பிரந் தம்பனஞ்செய்வதே. (௧உ௬)

{ தங்கம் - வசிகரம் - பொன் - மோகனம் - லோகம்- }
{ உச்சாடனம் - காரியம் - சங்காரம். }

செய்வதுதங்கம் வசிகரந்தீர்க்கமாம்
செய்வதுபொன்னில் தேருமோமோகனம்
செய்வதுலோகத்தில் தீருமுச்சாடனம்
செய்வதுகாரியஞ் சிவனேசங்காரமாம். (௧உ௭)

(நல்லெண்ணெய்-மோகனம்-எரண்டம்-ஆகிருஷிணம்.)

காரமாம்வெள்ளீயம் கருசனிமேவிடு
பேருறுமித்தளை பேதனஞ்செய்திடும்
வாருமேநல்லெண்ணெய் வாய்ப்படமோகனஞ்
சேருமேயேரண செய்யாக்கிருஷிணம். (௧உ௮)

{ ஆவின்நெய்வசீகரம் - வேப்பெண்ணெய் மாரணம் - புங்கெண்ணெய் உச்சாடனம் - புன்னையெண்ணெய் பேதனம். }

கருசனைஆவிநெய் காரணம்வசீகரம்
திருசெனும்வேப்பெண்ணெய் சொல்லியமாரணம்
புருஷினையோட்டிய புங்கெண்ணெயுச்சாடனம்
பருசனைபேதனம் பகர்புன்னைக்காயெண்ணெய். (௧௨௯)

{ ஆதளையெண்ணெய்-தம்பனம்-மேதிஆடுபண்ணி-வேசனம்-கழுதை - சுபத்துக்கு - அரிசிமாவு - வன்னி. }

எண்ணெயிலாதளை யெண்ணெயேதம்பனம்
வண்ணமாமேதிநெய் யாட்டுநெய்பண்ணிநெய்
விண்ணவர்காணவே வித்துவேஷணமதாம்
புண்ணியகழுதையும் அரிசிமாவன்னியே. (௧௩0)

(வன்னிஆல்-விளா-கன்னிமூலை-ருத்திரயீசானம்.)

வன்னியரசு வழங்கியஆல்விளா
கன்னிமாமூலை கருதிநீபார்த்திடு
உன்னியருத்திர உயிறிசரிந்திரன்
மின்னியசுபக்கர்மம் வேண்டிவனிருந்திடும். (௧௩௧)

(இந்திரன்திசை-இமதிசை-அக்கினி-வாய்வு அசுபகர்மத்துக்கு.)

இருந்திடும்மற்ற யிமதிசைஅக்கினி
வருந்தியமாறி வாய்வுறுமூலை
அருந்தியறிந்த அசுபகர்மத்துக்கு
குருந்தொடுசமுதைக் கொடிக்கள்ளியெட்டியே. (௧௩௨)

{ கள்ளி - எருக்கு - எட்டி - இச்சி - அத்தி - விடத்தலை கட்டுக்கொடிதம்பனம். }

எட்டியெருக்கலம் இத்தியுமத்தியும்
மட்டிவிடத்தலை மாமதன்முட்டிடு
கடுட்டுக்கொடியைக் கடக்கவைதம்பனம்
எட்டுக்குடாதே யெதிரோத்துதேவியை. (௧௩௩)

(தம்பனம்.)

தேவியைக்கண்டால் தெறிப்படுத்தெய்வங்கள்
வோவியஐயனு மோடுவான்முண்டியே
ஏவியபேயும் அண்டாதுவுன்னிடம்
ஆவியைக்காப்பது அக்காள்திறமாமே. (௧௩௪)

(தேங்காய்-கரு)

திறமானதேங்காய் திறந்துகண்விட்டு
முறையோடேமும்மலஞ் சேர்த்துமுடித்து
அறையானதூம்புரச் சிலையமூத்தி
பறையாமல்தேவி பதினாயிரமாமே. (கரு௬)

(மேது - உருஜெபிக்கவும்.)

பதினாயிரமுரு பகர்ந்துசுடலையில்
சதிசாமந்தன்னில் தண்ணியிற்போட்டால்
எதிரானதண்டு யிழப்பானுவெட்டில்
விதிசேருமுன்னே மிளக்கமுளைவிடே. (கரு௭)

முளைவிட்டுவைத்து முடித்தகருவை
களையப்பாற்பொட்டு கற்பிசந்தீர்த்து
பிளையப்பாசமூலம் பிலக்குங்குழிகாண்
இளையாதிடாதே யீசன்றன்னருளே. (கரு௭)

(இருவிழிப்பாவையறியவும்-நண்டுகுழிமண்-கைவிழிமண்.)

ஈசனுரைத்த யிருவிழிப்பாவையை
பேசுறேன்கேளு பிறர்க்குவிள்ளாதே
கூசாதேநண்டு குழிமண்ணும்வேளான்
மாசிலாக்கைவிழி மண்ணுநீவாங்கிடே. (கரு௮)

{ ஓமம் - பெருங்காயம் - கள்ளி - கடுகு - வெந்தயம்
அரைப்பு - வஸ்துப் - பால். }

வாங்கினமண்ணில் வளரோமங்காயந்
தூங்கினவுள்ளியுஞ் சோராக்கடுகும்
ஏங்கினவெந்தய மிட்டரைவஸ்துவின்
பாங்குறப்பாலின் படுமாவிசைத்திடே. (கரு௯)

{ மாவெள்ளை - இருநாவிகூட்டி முப்பத்திரண்டுருப்புஞ்
சரியாய்ச்செய்து - கள்ளிப்பால்தடவி - மயானபூசை
வெள்ளைபுஷ்பம் - செஞ்சாவல் - வஸ்து - அ - வித்தையும்
ஆடும் - மும்மலம் - மாரணம். }

இசைத்திடுவெள்ளை யிருநாவிகூட்டி
பசைத்திடுமண்ணை பாவைபோற்பண்ணி
இசைக்கவொண்ணாத யிருவிழிப்பாவை
வசக்கிருகாதே வகுத்திடுரூபமே. (கச०)

உருபமுப்பத்திரண் டொன்றுதப்பாமல்
யறிவுருசெய்து யதற்குமேல்நித்தம்
திருவுருப்போலே தினங்கள்ளிப்பாலாம்
மருவறத்திட்டி வணங்கல்செய்வாயே. (கசக)

செவ்வாய்க்கிழமை நடுமத்தியானம்
பவ்வாய்மயானம் படுகுழிதோண்டி
செவ்வையாயங்கே சிலைதனை நாட்டி
மூவ்வாறுவேளை முகிப்பலைய்பொற்பூசையே. (கசஉ)

பூசைக்குவெள்ளை புஷ்பமுஞ்சாத்தி
ஆசைக்குச்சாவல துசிவப்பாகும்
தோசைக்குவஸ்துகுரு சொன்னபடியாகும்
ஆசைக்குத்திர வஸ்துவைப்பாயே. (கசங)

வைத்திடுபாவையை மறைவாகவைத்திடு
சத்துருவுக்குத் தானெனச்செய்வையோ
அத்தையெடுத்து ஆட்டிவைப்பாயே
வித்தைகளெட்டும் விளையாடும்பாரே. (கசச)

பாருநீமும்மலம் பாங்காயெடுத்து
சேரும்வழலைச் சேர்த்தங்கரைத்து
பீரங்கெடாமல் மெழுகாயுருட்டி
சூரியன்பாவை துலைதனில்வையே. (கசரு)

வைப்பாய்நீவைத்து துலைவழிமூடி
அப்பாலுமாரண மதுசயவென்றால்
முப்பால்முறைப்படி மூட்டிடுபூசையை
இப்பால்விரகிட் டெரிவிழுவானே. (கசசு)

(முடக்கஞ்செய்ய.)

வானேமுடக்க மதுசெய்யவென்றால்
ஊனனபாவை யுருவில்முள்குத்தத்
தீனம்பிறக்கத் திக்கும்வெள்ளாவிவை
ஞானவாநீயே நயனத்தைக்கேளே. (கசஎ)

(நயனங்கெட.)

கேளப்பாபாவை நாட்டிடுநாட்டத்தில்
தேளப்பாகொடுங்கொடுக் கெனச்செய்தால்
நாளப்பாயேழில் நயனம்போஞ்சொன்னர்
வேளப்பாவென்ற விமலன்சற்நாகியே. (கசஅ)

(நாசியழுக - முதுகில் - ராஜப்பிளவுகாண.)

நாசியிலூண நடுமூக்கழுகும்
பேசியநாவில் பிளவையாம்மூன்று
ருசியமென்ன ராஜபிளவைக்கு
தோசிமுதுகிடந் தொட்டேனுனலே. (கசகூ)

{ தண்டுபிளவை - துடைவாழை - அரையாப்பு
உச்சிப்பிளவு - இதுகள்நீரவிவரம். }

ஊணியலிங்கத்தி லூணினற்கேளு
பேணியதண்டு பிளவையுமாகும்
தோணியருயந் துடைதனிலூண
வாணியம்போல வருந்துடைவாழையே. (கரு0)

வாழையரையில்வைத் தூணச்செய்தால்
ஆளரையாப்பு ஆமைபோற்காணும்
ஏழையாய்ச்சொன்னே னிந்தமுள்க்கொண்டு
மூளையிலூண மூளைக்கும்பிளவையே. (கருக)

பிளவையைத்திறக்கப் பிறந்தநாள்பத்தில்
முளைமூளைவாங்கி முழுகுஞ்சீலத்தில்
களையமேவிருங் கைகண்டவித்தை
உளையமடவார்க்கு வுருப்படிசெய்யே. (கருஉ)

(ஆணுக்குவலதுபுறமும் - பெண்ணுக்குஇடதுபுறஞ் செய்யவும்.)

உருப்படியாணுக் கொருவல்மாகும்
இருப்பதுபெண்ணுக் கிடதுபுறஞ்செய
கருப்படிசேருங் கருமலமொன்று
குருப்பொடிமத்திசங் கொண்டதொன்றுமே. (கருந)

(பெண்குறிக்கும்.)

ஒன்றுனகாரியஞ் சொல்லமறந்தோம்
நன்றுகக்கேளு நடுமத்திசமாய்க்
குன்றுமற்பெண் குறிகூடாதிடுக்கம்
மன்றுடிச்சொன்ன வகையுரைத்தோமே. (கருச)

{ தொழில்செய்யலாகாதபேர் - ஏழை - வேதியர் - மன்னர்
கலியாண சொந்தஸ்ரீ - பாலர் - குருவும். }

உரைத்தாரோவைய ருள்ளதோர்சேதி
யுரைத்தாரோயேழைக்கும் வேதியர்மன்னர்க்கும்
நிரைத்தாரோபெண்ணுக்கும் நீக்கியபாலர்க்கும்
உரைத்தாரோகுருவுக்குஞ் செய்யொணுதென்றே. (கருரு)

(முள்பிடுங்கக் - கழிப்புசெய்யவும்.)

ஒண்ணனமுள்ளை பிடுங்கியபோது
வண்ணாரபாடன் வாரியேகேழ்ப்பான்
உண்ணுதசோற்றி லொருபிடிசோறும்
திண்ணுதசாவலுந் திண்ணென்றுபோடே. (கருசு)

போடவேமாடன் புலமாடன்வீரன்
ஆடவேவந்த அனுமான்வைரவன்
தேடியமொட்டையன் சின்னெடுகாலனும்
சாடியகாளியுந் தருக்கிநிற்பாளே. (கருஎ)

(சாந்திசெய்ய சகலதுன்பமும் போய்விடும்.)

பாளேபோகாமல் களிப்பொன்றுபண்ணுவாய்
கோளேதுமில்லை குடிகோத்திரத்துக்கும்
வாளவந்தெய்து மனுஷர்சகலர்க்கும்
தோளரசுகாக்குஞ் சொல்லிடுசாந்தியே. (கருஅ)

சாந்திசெய்தாக்கால் சகலபுழுமாறும்
சாந்திசெய்தாக்கால் சகல்நோய்போய்விடும்
சாந்திசெய்தாக்கால் சண்டனும்வாரான்
சாந்திசெய்தாக்கால் தவம்பண்டிதர்க்கே. (கருகூ)

தவம்வேண்டுமானல் தர்மத்தைச்செய்திடு
சுகம்வேண்டுமானல் துதிநிஷ்டைசெய்திடு
தவம்வேண்டுமானல் சனத்தைப்பிழைக்கவை
தவம்வேண்டுமானல் தணிப்பாய்வெகுளியே. (கசு0)

(வெகுளியாய்க்கருவிடாதே - சல்லியஞ்சொல்லாதே.)

வெகுளியாயெங்கும் விநயஞ்செய்யாதே
வெகுளியாயெங்கும் விடாதேகருவை
வெகுளியாயெங்கும் விள்ளாதேசல்லியம்
வெகுளியாயாசை விளம்பிடவேண்டாம். (கசுக)

(வேண்டியவாடை வசியச்சொல்லும்.)

வேண்டியவாடை வசியம்விளப்பினர்
தூண்டிலைப்போட்டு தூராலைப்பிடித்தபேர்
கூண்டிடுசோலி கூடாதுமாதலை
ஆண்டவன்பேர்விட் டவன்பேருமறியாரோ. (கசுஉ)

(பெரியோர்கள் - கொடிக்கருமாவன்றி குறியாகமாட்டாது.)
அறியார்கள்செத்தபின் கருவீரமென்பார்
குறியாமவந்தக் கொடிக்கருமாவின்றி
சிறியாரோநம்மைத் திறமுள்ளோர்கண்டால்
பரியாசஞ்சொல்லிப் பழித்தழைப்பாரோ. (கசுரு)

(வழலைகரு - சத்திதயிலம் - இறக்கும்விவரம்.)
அழைப்பார்முன்சிவ னருவழலைப்பெண்
பிழைப்பாரிதன்றி பிழையார்க்குச்செத்தென்
இளைப்பாய்விடாதே யின்னமறியில்
துளைப்பானென்சல்லியம் புகுந்ததுமொன்றே. (கசுச)

(பூததயிலம் - நெய்வடி.
ஒன்றும்வழலை யொண்ணித்துவாங்கி
குன்றுமற்பூரங் கொடுத்தொருபாண்டத்தில்
நன்றாகவைத்து நவில்துளைமுன்னிட்டு
கன்றானவெள்ளங் கண்வழிநெய்யே. சுரு)

(கணபதிபூஜை - இது - ஆதிகண்கண்டது.)
நெய்க்குக்கணபதி நேமகஞ்செய்து
மெய்க்குநின்றூட்டு வேண்டுமென்றேத்தி
பொய்க்கும்வினைக்கும் பொருந்தாதியென்று
கைக்குளிருக்கக் கண்கண்டதாமே. (கசுசு)

{ இந்தத்தயிலத்தை-மஞ்சள்மெழுகிலுருட்டிச் செப்பில்வைக்கவும். }

தாமேயிருந்த தயிலத்தையின்னம்
நாமேயுருட்ட நயங்கேளுமிப்போ
வேமேமஞ்சள் மெழுகினிற்றூக்கி
வோமேகனக்க வுருட்டிவைசெப்பிலே. (கசுஎ)
செப்பிலிருக்கச் சேதம்வராது
எப்போதாகிலுந் தனக்கேத்தவேளை
ஒப்பியயெளப்போ லுருக்குத்தித்தாங்கினல்
அப்போதெரியும் வழலையருமையே. (கசுஅ)

{ வழலையறிந்தால் - வகைதுகைவேண்டாம்- பழைய நூல்வேண்டாம் - படிக்கவேண்டாம். }

வழலையறிந்தால் வகைதுகைவேண்டாம்
பழயநூல்வேண்டாம் படிக்கவும்வேண்டாம்
தழைவிடுபஞ்சந் தரிக்குமோபூமியில்
அளவுடையணுவள வாகிலுமாமே. (கசுகூ)

(பஞ்சில்-நெருப்பு-அணுவளவுதாக்க-ஐங்காயமாகும்.)

அணுவளவிட்டால் ஐங்காயமாகுந்
தனுவுளனவர்க்குச் சாற்றினேன்கேளு
நினவுடன்செய்வாய் நினைவைவிட்டாக்கால்
மனதுகையாது மதிகெட்டமாடே. (கஎ0)

மாடேபிரிக்க வகைசொல்லுவேன்கேளு
காடுமேடென்ன கதையென்றெண்ணாதே
வாடாவழியே வசவுகேளாதே
கேடேதிரிந்து களத்துணிவாங்கே. (கஎக)

{ களாத்துணிமடிப்பில்-சீந்தில்விழுது
தூம்-ஸ்ரீம்-சூம்-என்றே-தூ-உரு-பேதனம். }

வாங்கியே தாம்புரச் சீலைமடிப்பில்
தூங்கியேசீந்தி விழுதையும்வைத்து
பாங்குறவந்த பகைவர்பேர்மாறி
தீங்குறச்சீட்டி லெழுதிடுசியன்றே. (கஎஉ)

சீயென்றுஆயிரஞ் செபித்துக்கூறையில்
சாயும்பொருதினிற் சந்தைகலையுங்கால்
மாயமாய்த்தூமென்று மலஞ்சிறிகுவென்று
ஆயிரஞ்செபித்தே யவர்நாமங்கூறே. (கஎங)

கூறியபோது குடிபோவான்சண்டையால்
மாறியேவொன்றுக் கொன்றுதலைமாறி
சீறிச்சினந்து தீவிரமாகவே
ஊனைவிட்டோடி யுலைந்திடுவாரே. (கஎச)

(சல்லியவேர் வகைதெரியாமற்போனார்கள் தொட்டியப்பூடு.)

வாசமாஞ்சல்லிய வேரின்வகையைப்
பேரறியாமல் பிரண்டரானவர்
நேர்நிறையாக நிகழ்த்தியமூலம்
சோராமற்சொல்லுந் தொட்டியப்பூடே. (கஎரு)

{ தெரிசிங்கித்தயிலம் - வயித்தியர்க்குவேண்டியது
தெரித்தால் சகலவியாதியும்வரும் - கருகும். }

பூடொன்றுகண்டால் பூதலமீதில்
ஆடலாஞ்சித்து அதிலேயனேகம்
வாடவேவேண்டாந் தெரிசிங்கிவண்ணம்
பாடுறேன்கேளு பண்டிதனாரே. (கஎசா)

பண்டிதர்தில்லைப் பாத்தள்ளிப்பாலும்
பிண்டியசெங்கொட்டை விரையின்றயிலமும்
திண்டுமுண்டான திருகுகள்ளிப்பால்
கொண்டொன்றாய்க்கூட்டி கௌரியுங்கூட்டே. (கஎஎ)

கூட்டுவாய்க்கருநாபி கூடவேகூட்டி
ஆட்டுவாய்நீர்மேல் நெருப்புச்சாறிட்டுமே
மூட்டுவாய்செவிநஞ்சு முப்புவாநஞ்சு
தீட்டுவாய்த்தேளுஞ் சுணையுஞ்செந்தொட்டியே. (கஎஅ)

தொட்டித்திராவகஞ் சேனிக்கவாட்டியே
நட்டுவக்காலிதேள் நல்விஷப்பல்லுடன்
தட்டியிட்டாட்டி தளராமல்சிங்கியை
யெட்டித்தெரிக்க யெண்ணத்துலையாதே. (கஎகூ)

துலையாதஆக்கை சொரிசிறங்காகி
நிலையாதகுட்டமாய் நேத்திரங்கெட்டு
புலைவாயுடம்பு எலைந்துதளர்ந்து
சிலையானதேகஞ் சிதைந்துவிழுகுமே. (கஅ0)

விழுமேதியப்பட்ட புண்போலமேனியுங்
கொளுமேகொழுத்துபோய் குட்டமுமாகியே
யெழுமேதடிப்பு யெழுந்துசுணைகெட்டு
யழுமேமனைவியு மக்களுமாமே. (கஅக)

மக்களும்பிள்ளையும் கொள்ளியும்வற்றி
தக்கனுமானல் தயிலஞ்செய்யாதே
விக்கினம்வந்து விருதாவிறங்கும்
அக்கனையாக அலையாதேபாரோ. (கஅஉ)

அலையாமலின்ன மடக்கமருந்து
மலைதாங்கிவேரும் விடத்தோலின்வேரும்
கலக்கொம்புகொண்டு கன்றவேகெல்லி
யுலையாமல்வேரை யுருவேற்றிக்கொள்ளே. (கஅ௩)

(தம்பனம் - குளிசம் - கள்ளர்பயமில்லை - கனல்சுடாது.)

கொள்ளவேசொன்னேன் குறிப்படிரண்டையுந்
தள்ளாமற்பூசித்துத் தாம்பிரத்தகட்டினில்
மெள்ளவேசுத்தி விரும்பிப்பணிந்திடக்
கள்ளர்பயமுங் கனலுஞ்சுடாதே. (கஅ௪)

(விஷம் - குண்டு - அம்பு - சிவயநம - உரு - ஈ.)

சுடாதேவிஷமுந் தூணியும்பாணியும்
அடாதேகுழலும் அம்புபடாது
விடாதேகருவை விளம்புறுநூறு
நடாதேசிவயநம வென்றுதானே. (கஅரு)

(விந்துதம்பனமூலிகை - ஆர்க்குந்தெரியாது - வே - என்றது.)

தானே(வே)யென்ற தம்பனமூலிகை
நானேதான்சொன்னே நாடாதிதற்கும்
ஊனேகொடிபோ லுந்தியிலுள்ளது
மானேயருக்கையில் வாங்கிச்செம்பேபோடுவை. (கஅசு)

வைத்தகுளிசம் மணிமுன்கிடந்தால்
உற்றதுவிந்து வுடனேகழண்டிடும்
மற்றதுபின்னே மாறிக்கிடந்தால்
செத்தாலுமங்கே சிவவிந்துவிழாதே. (கஅஎ)

{ சல்லியவேர்-வெள்ளிக்கிழமையில்-வெண்சாவல்வெட்டி
வெள்ளித்தகட்டில் அஷ்டமாசித்தியாகும். }

விந்துருசல்லிய வேரையும்வெள்ளிலே
விந்துருகாப்பிட்டு வெண்சாவல்வெட்டியே
விந்துருவாகியே வெள்ளித்தகட்டிலே
விந்துறக்கட்டினால் வேடிக்கையாடுமே. (கஅஅ)

(பெண்கள்வசியம் - சத்துருவசியம்.)

ஆடுமேயட்டமா சித்தியுந்தானும்
நாடுவார்பெண்கள் நமஸ்காரஞ்செய்குவார்
ஓடுமேசத்துரு வொருநாளும்வாரான்
தேடுமேவசியஞ் செகச்சாலநூலே. (கஅகூ)

(வெண்கொழிஞ்சிவேர் - சகலவசியம்.)

நூல்கொண்டுகட்டினால் வெள்ளைக்கொழிஞ்சியைப்
பால்கொண்டுபொங்கல் பாங்காகப்பண்ணியே
மால்கொண்டுபோன மாருபேர்சொல்லிடில்
கால்கொண்டுவோடி கடுகவருவாளே. (ககூ0)

{ நஞ்சுமனுடருடன்சேர்த்து - செஞ்சிலையுருட்டி
ஞானத்தில்புகையேற்ற விஷமீளும். }

வானத்தினஞ்சை மனுடனுன்சேர்த்து
பானத்தின்சிலை பாத்தியுருட்டி
ஞானத்திலேத்த நமன்கொண்டுபோன
மோனத்தின்சிவ னேடிவருகுமே. (ககூக)

(முட்டையில்தம்பனம்.)

ஓடியமுட்டையி லூட்டியதம்பனம்
பாடியேபிண்டக் கருவும்படித்திடில்
வாடியஆணும் வரண்டுபிராணன்
மோடினவத்தப்பால் முடிவிழுவாரே. (௧௧௰௨)

(தொடுகுறிசரக்குகள்விபரம்-யாவருந்தொழ·)

விழுவாரோமாம்செவிக் கள்ளிச்சாற்விட்டு
அழுஞ்சலின்வேரு மமுக்கிருகோஷ்டமும்
குளவிந்தமஞ்சளுங் கூட்டியரைத்ததில்
தொழுவாரோயாவருந் தொடுகுறிதானே. (௧௧௰௩)

(ஈஸ்வரமூலி.)

குறிகண்டோமென்று குலாவுதலாகி
வெறிகொண்டநாய்போல விள்ளாதேலொள்ளென்று
முறிகொண்டயீஸ்வர மூலியின்வேரைத்
தறிகண்டமாகத் தரிப்பதழகே. (௧௧௰௪)

(மாவென்றுதறி பழகாதபேர் பழகுங்கரு.)

அழகானமூலித் தரிக்கையில்மாவென்று
புளகமாய்ச்சொல்வார் புரோசனங்கண்டுமே
பழகாதபேரும் பழகுங்கருத்தான
குளவாமற்சிவ னிறப்பானெதிரியே. (௧௧௰௫)

(எதிரிபட - விதுரன் - பச்சிலைமூலம்.)

எதிரிபட்டானே யினிமேற்காரியம்
உதறிவெற்பாரா யோடவுங்கண்டால்
சதிரியாக்காதே தகையாதுநீபோய்
விதுரனைப்போலே வில்முறித்தானே. (௧௧௰௬)

வில்முறித்தார்க்கு விஷ்ணுமூலங்
கல்லடைத்தார்க்குக் கருதுஞ்சீதேவி
வெல்வறிப்பூடு வெல்வலியாதி
கொல்வலிப்பூடு கொல்லும்பச்சிலையே. (௧௧௰௭)

(அச்சடித்து - துறவுகோல்.)

பச்சிலைமூலம் பாடினேங்கேளு
அச்சுவச்சதை யடுப்பதுபோல
மச்சிலேவைத்த பொருளைப்போல்வாங்கு
குச்சிலைக்கொண்டு துறவுகோல்பூட்டே. (௧௧௰௮)

பூட்டினேனிந்தப் பொன்னிருநூறும்
கூட்டினேமந்திரம் குருவின்கருமுறை
நீட்டினேங்கருக்கிடை தெளிந்தமுறைபாடு
வாட்டமுடியில்லை நமனென்றபேர்க்கே. (௧௯௯)

(காமவினையறுப்பது.)

பேர்பெறஆசான் பிறக்கினவானுய்
நேர்பெறச்சொல்ல நினைவாயறிவாய்
சீர்பெறவாலையைச் சிந்தித்துநில்லு
ஏர்பெறுகாம வினையறுப்பாயே. (உ00)

அறுப்பான்விளைந்த பருவத்திலாசான்
நிறுப்பான்றிராசு நிறையெனக்கன்மம்
பொறுப்பான்றவத்தைப் பூட்டியபேர்க்கு
வெறுப்பான்சகல விரோதமும்பாரே. (உ0௧)

{ பாவஞ்செய்யாதே - ஆசானை அடுத்துநீபாரு
சூட்சு - தெரிந்துகொள். }

பாரினிலிந்த முறைப்படிபார்த்து
தேருநீபாவஞ் செய்யவும்வேண்டாம்
ஆருநீபாரு அறுபத்துநாலும்
நேரிருநூறு நிகண்டதுமுற்றே. (உ0உ)

அகத்தியமுநிவர் அருளிச்செய்த

ஜாலநிகண்டு-உ00.

முற்றிற்று.